[2022 ஜனவரி 6

7—

புதிய மாவட்டம்

***4523—திரு. ட்டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஓசூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தினை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஓசூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் பூர்த்தியாகாததால், ஓசூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஒரு காலத்தில் புகழ்பெற்ற விஜயநகர மன்னர்களில் ஒருவரான கிருஷ்ணதேவராயர் சாம்ராஜ்ஜியத்தின்கீழ் இருந்தது. இன்றைக்கு கிருஷ்ணகிரி மாவட்டம், 1,343 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள பெரிய மாவட்டமாக உள்ளது. தேன்கனிக்கோட்டை, அஞ்சட்டி வட்டங்களில் உள்ள நாட்ராம்பாளையம், கொடகரை போன்ற மலைக் கிராமங்களிலிருந்து மாவட்டத் தலைநகருக்கு வந்து,

2022 ஜனவரி 6]

மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்திக்க வேண்டுமென்றால் 150 கிலோ மீட்டர் தூரம் மூன்று, நான்கு பேருந்துகளில் மாறி மாறிப் பயணிக்க வேண்டியிருக்கிறது; அதற்கு ஒருநாள் தேவையாகிறது. ஆகவே, பொதுமக்கள் மற்றும் நிருவாக நலன் கருதி, அஞ்சட்டி, தேன்கனிக்கோட்டை, சூளகிரி, ஒசூர் வட்டங்களை ஒன்றாக இணைத்து, ஒசூரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய மாவட்டத்தினை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் வழிகாட்டு நெறிமுறைப்படி மாவட்டத்தைப் பிரிப்பதற்கு வழியில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு செல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆசியாவிலேயே வேகமாக வளர்ந்து வருகின்ற தொழில் நகரங்களில் 13–வது இடத்தில் ஒசூர் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், ஒசூரில் 3,500 ஏக்கர் பரப்பில் சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்காக* TIDCO *மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. ஆகவே, தொழில் வளர்ச்சி மற்றும் பொதுமக்களின் நலனைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து மீண்டும் மறுபரிசீலனை செய்து, ஒசூரை மையமாகக்கொண்டு, புதிய மாவட்டத்தை உருவாக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுதான்*

இருக்கிறார்கள். தேவையிருப்பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் அனைவருக்கும் என்னுடைய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். பொள்ளாச்சி வருவாய்க் கோட்டம், 1857 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. இன்றைக்கு மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்ற திருப்பூரே ஒரு காலத்தில் பொள்ளாச்சி வருவாய்க் கோட்டத்தில் ஒரு துணை வட்டமாகத்தான் விளங்கிக் கொண்டிருந்தது. பொள்ளாச்சி ஒரு பாரம்பரியமிக்க நகரம். எனவே, பொள்ளாச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், வால்பாறை, கிணத்துக்கடவு ஆகிய தாலுகாக்களை ஒன்றிணைத்து, புதிய வருவாய் மாவட்டத்தை இந்த அரசு விரைவில் உருவாக்கித் தருமா என்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாண்டு காலம் தமிழ்நாட்டை ஆண்ட ஒரு கட்சி, அதிலே முக்கியமான பொறுப்பில் இருந்தவர், அவர்களுடைய காலத்தில் செய்யாததை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்வார் என்ற நம்பிக்கையில் கேட்டதற்காக முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற இந்தக் கோரிக்கைகளையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

2022 ஜனவரி 6]

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2021 ஆம் ஆண்டு, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், முதலமைச்சராக இருந்தபோது, திருநெல்வேலி மாவட்டம் பிரிக்கப்பட்டு, தென்காசி மாவட்டம் உருவானது. அதற்குட்பட்ட ஆலங்குளம் தொகுதிக்குட்பட்ட கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் அதிகமான மக்கள்தொகை மற்றும் வருவாய் கிராமங்கள் உள்ளன. அப்பகுதி மக்கள் தாலுகா அலுவலகத்திற்கு தென்காசிக்கும், ஆலங்குளத்திற்கும், அம்பாசமுத்திரத்திற்கும் செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தினால், கடையம் பகுதியிலுள்ள மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான கடையம் ஊராட்சி ஒன்றியத்தைத் தனி தாலுகாவாக உருவாக்க அரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தென்காசிக்குப் போனபோது இந்தக் கோரிக்கையை அப்பகுதி மக்கள் என்னிடம் வைத்திருக்கிறார்கள். அதுகுறித்து அரசு பரிசீலிக்கும். திருநெல்வேலியிலிருந்து தென்காசி பிரிந்தாலும், நிறைய அரசு அலுவலகங்கள் திருநெல்வேலியில் இருப்பதை அறிந்தோம். நம்முடைய அரசாங்கம் அமைந்த பிறகு, அவற்றையெல்லாம் பிரித்துக் கொண்டு வருகின்ற வேலைகள் கடந்த ஆறு மாத காலமாக நடந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், மாவட்டங்களைப் பிரித்திருக்கிறோமேயொழிய, எல்லா அலுவலகங்களும் அந்தந்த மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு அந்தப் பணியையும் செய்துகொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்து ஏற்கெனவே அரசின் கவனத்திற்கு வந்துள்ளதால், அதனை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.